செ.வெ.எண்.316 நாள்.15.05.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.05.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் 300க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தங்களது கோரிக்கை மனுக்களை கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை அழைத்து மாற்றுத்திறனாளிகளின் மனுக்களின் மீது கனிவுடன், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும், கடந்த முகாமின் போது பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ், தென்காசி வருவாய் கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் (பொ) திரு.பழனிக்குமார், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.சாந்திகுளோரி எமரால்ட் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.